# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :27 July 2025*
கோட்டை:7 வாயில்:27 ஜூலை 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.



**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

குறுந்தொகைப் பாடல்களில் உளவியல் பகுப்பாய்வு அணுகுமுறை
முனைவர் இரா.ஜெய்சங்கர்

புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் ஆளுமைத்திறன்
முனைவர் அ.சேமலா வசந்தா

ஐங்குறுநூற்றில் பாணர்
தே. சுதா

தொல்காப்பியம் காட்டும் நிறக்கோட்பாடுகள்
க.சுவாதி

சங்க இலக்கியங்கள் சுட்டும் களவு கோட்பாடுகள்
ஏ. தீபா

சிலம்பில் இயற்கை
க. மங்கையர்க்கரசி

மணிமேகலையில் மனிதநேயம்
பெ. ஜோதி,

இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு
முனைவர் ஏ.சித்ரா

பண்டைய தமிழர்களின் மணமுறைச் சடங்குகள்
முனைவர் கி.சரண்யா

ஆற்றுப்படைகலைஞர்களின் அறம்
கு. சிந்து

பண்டைகாலத்து தமிழக மக்களின் வாழ்க்கைமுறை
ம. துர்க்காதேவி

ஒரு சொல் பல பொருள் - வேர்ச்சொல் வழி விளக்கம் அறிதல்
முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை

வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறம்
முனைவர். நா. ஹேமமாலதி

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**தமிழர் நிலத்தில் பாலையும் ஒட்டகமும்**
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

**தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள்**
முனைவர்.அ.ரேவதி

**தமிழர் மரபும் வாழ்வியலும்**
பொ. அகத்திய பாலா

**தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள்**
முனைவர் வ.மோகனப்பிரியா

**பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் சிலேடையணி**
வே.வெ.சுஜாதா

**கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்படும் விதம்**
மேபல் சுபிதா த.

**பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர்தம் நாட்டியக் கலைப்பணியும்**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**உலாப்பிரபந்தங்களில் நாட்டியசாஸ்திரம் கூறும் அஷ்டவித நாயகிகளின் வகிபங்கு**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**நாட்டுப்புற வழக்காறுகள் நோக்கில் கானகன் நாவல்**
ர.விண்ணிலவு1, முனைவர் அ. மரிய செபஸ்தியான்2

**சங்கக் கால திணை பதிவுகளின் இடையர் இன மக்களின் சமூக வாழ்க்கையும் கீதாரி நாவலில் இடையர் வாழ்வியல்**
ஓர் ஒப்பாய்வு- சே.நிர்மலா1, முனைவர் அ.மரிய செபஸ்தியான்2

**வேள்பாரி புதினத்துள் அகநானூற்று காட்சிகள்**
ர.கிருஷ்ணவேணி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்கமும், பின்காலனியப் பெண்ணியமும்
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

கவிஞர் எழிலவனின் 'மரவாடியில் ஒரு போதிமரத்தில்' படைப்பாக்க உத்திகள்
சி.ஆர்த்தி

தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலை
பி.தீபாவதி

கீரனூர் ஜாகிர் ராஜா புதினங்களில் இஸ்லாமியர் பண்பாடு
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

உரிப்பொருள் உணர்த்தும் கவிஞர் சுகிர்தராணி கவிதைகள்
ந.ஸ்டாலின்

தமிழ்த் திரை இசைப் பாடல்கள்
கார்த்திக் க

நிர்வாணமுக்தி சிறுகதை - பெண்மைய விமர்சனம்
ஜென்சி வை கி

இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள்
சே. வனிதா

Historical And Archaeological Impact Of Palayarai
Dr.S.Neelavathy

Chola's Temples As A Social Organization
A Study - S. Mala

A Statue Of Prakara At The Kumbakonam Nageswara Temple
M. Amirthavalli



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# தமிழ்

# குறுந்தொகைப் பாடல்களில் உளவியல் பகுப்பாய்வு அணுகுமுறை
# *Psychoanalysis Approach in Kurunthogai Songs*

*Dr.R.Jaisankar, Associate Professor in Tamil (CDOE),*

*Bharathidasan University, Thiruchirappalli, Tamil Nadu,India.*

*ORCID : https://orcid.org/0000-0002-2959-6384*

***Abstract***

*Research work of Tamil Literature change in different parameter in day to our life. By this manner, Tamil classical Literature is researching by Modern Principles applied in research scholar and critics. This paper examined by Psychoanalysis approaches in Kuruntoki songs, particularly in Velli Vethiyyar song(27) and Avaiyyar song(28). Above these two songs came under the Psychoanalysis principles. Sigmund Freud and Edmund Wilson's Psychoanlaytic principles applied in these two songs. From this research, we point out that the expressions of unconscious mind of Thalaivi's feelings like emotions, anxiety, hopelessness are phantomized in parable and metaphor. Velli Vethiyar songs, Thalaivi expressed her feelings in smooth and transparent manner but Avaiyyar songs are harshed and transparent manner. We can see Thalaivi's spontaneous expressions of powerful feelings both poets songs. Tradition of Agam trespassed through these two poets songs. The suppressed or oppressed of Thalaivi's, conscious and unconscious mind joined together and became a good songs or arts. Freud's Psychoanlaytic theory conincided with these two poets songs.*

***Keywords:*** *Psychoanalysis, unconscious mind, powerful feelings, oppressed, suppressed, conincident.*

**முனைவர் இரா.ஜெய்சங்கர், தமிழ் - இணைப்பேராசிரியர்(CDOE),**

பாரதிதாசன் பல்கலைக்கழம்,திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.

*ORCID : https://orcid.org/0000-0002-2959-6384*

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கிய ஆய்வுத்தளம் காலத்திற்கு ஏற்ப பல மாற்றங்களையும் பரிமாணங்களையும் பெற்று வருகிறது என்பது நிதர்சனமான உண்மை. அந்த வகையில் செவ்வியல் இலக்கியமான சங்க இலக்கியம் மரபு ரீதியான ஆய்வுக்கும், நவீன கோட்பாட்டு ரீதியான ஆய்வு முறைகளுக்கும் உட்படுத்தப்பட்டு, பல கோணங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாய்வுக் கட்டுரையில் குறுந்தொகைப்பாடல்கள் உளவியல் சார்ந்த பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுச்சுருக்கம் கருதி குறுந்தொகையில் இடம் பெறும் வெள்ளிவீதியார் பாடல் (கு.27), ஔவையார் பாடல் (கு.28), ஆகிய இரண்டு பாடல்கள் மட்டும் உளவியல் பகுப்பாய்வு கோட்பாடு முறைக்கு உட்படுத்தபட்டுள்ளன. **ஃபிராய்டின்** உளவியல் பகுப்பாய்வு மேற்காணும் பாடல்களில் பெரிதும் பயன்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட இரண்டு பாடல்களிலும் தலைவியின் உளத்தவிப்பு, ஆற்றாமை, தன்னிரக்கம், கோபம் ஆகியன வெளிப்படையாகப் பாடல்வழி வெளிப்பட்டுள்ளது. தலைவியின் பிரிவு உணர்வு வெளிப்பாடு அடிமனத்தின் வெளிப்பாடாக அமைகிறது. அவ்அடிமன வெளிப்பாடு உவமை, உள்ளுறை, உருவகம் போன்ற உத்திகளாக வெளிப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. பெண்கள் காம உணர்வை வெளிப்படையாகக்

கூறக்கூடாது. அது புதுமண் கலத்து நீர்க்கசிவு போல மறைமுகமாகச் சொல்லப்பட வேண்டும் என்பது சங்ககால அகமரபு அவ்மரபு மாற்றம் பெற்றிருப்பதை இவ்விரண்டு பாடல்களில் காணமுடிகிறது. ஔவையார் பெண்பாற் புலவர் வரிசையில் தலைமையானவர். இவருக்கு அடுத்து வெள்ளிவீதியார் இவர்கள் இருவரும் பெண்ணுக்குரியதாக அவர்கள் காலத்தில் பேசப்பட்ட மரபுகளையும் எல்லைகளையும் தாண்டி தலைவியின் அக உணர்வுகளைப் பாடியிருப்பதைக் காணமுடிகிறது. பாலியல் அழுத்தங்களுக்கு அடிமனம் (Unconscious mind) காரணமாக அமைவதும் அவை அறிமனத்தின் (Conscious mind) உதவியால் கலைநயம் பெறுவதும் உண்மையே என்ற ஃபிராய்டின் உளவியல் பகுப்பாய்வுக் கோட்பாடு இவ்விரு பாடல்களில் பொருந்தி வருவதைக் காணமுடிகிறது.

**திறவுச்சொற்கள் :** உளவியல் பகுப்பாய்வு, அடிமன வெளிப்பாடு, மரபுகள், கலைநயம், அறிமனம்.

**முன்னுரை**

காலத்தின் தேவைக்கு ஏற்ப தமிழ் இலக்கியங்களை ஆய்வு செய்யும் போக்கில் பல மாற்றங்கள் அடைந்துள்ளது. அந்த வகையில் தமிழ் இலக்கியங்களைப் பிறதுறை சார்ந்த ஆய்வு கோட்பாடுகளோடு இணைந்து ஆய்வு செய்யும் போக்கு வளர்ந்துள்ளது. தமிழ் ஆய்வாளர் மத்தியில் தமிழ் இலக்கியம் குறித்த சிறப்பான புரிதலுக்கு வழி வகுத்துள்ளது. அந்த வகையில் தமிழ் இலக்கியத்தை உளவியல் சார்ந்த கோட்பாட்டாய்வுக்கு உட்படுத்தி ஆய்வு செய்வது ஆய்வாளர் மத்தியில் கவனம் பெற்று வருகிறது. இவ்வாய்வுக் கட்டுரையானது குறுந்தொகையில் இடம்பெறும் வெள்ளிவீதியார், ஔவையார் பாடல்களை உளவியல் கோட்பாட்டாய்வுக்கு உட்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**உளவியல் பகுப்பாய்வு**

உளவியல் பகுப்பாய்வானது இலக்கியத்தின் புரியாத இடங்களைப் புரிந்து கொள்ளவும், இலக்கியத்தின் முக்கியமான உட்பொருளைக் குறிப்பிட்ட ஒரு கோணத்தில் தெரிந்து கொள்ளவும் பெரிதும் உதவுகின்றது. மேலும் உளவியல் பகுப்பாய்வானது இலக்கியக் கோட்பாட்டினுள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது.

மனித மனம் பற்றி அறிவியல் பூர்வமாக ஆய்வு மேற்கொண்டதில் முன்னோடியாகத் திகழ்பவர், **ஆஸ்திரியா நாட்டு வியன்னாவைச் சேர்ந்த சிக்மண்ட் ஃபிராய்டு (Sigmund Freud)**. இவரது உளப்பகுப்பாய்வியல் (Psychoanalysis) என்று அழைக்கப்படும் ஆய்வு முறையானது, மனித மனங்களையும், அதனால் உருவாகும் இலக்கியப் படைப்புகளையும் ஆராய்ந்து விவரிக்கிறது.

**“மனித உள்ளத்தின் உணர்வே எல்லா அறிவியல்களுக்கும் கலைகளுக்கும் கருவறையாக விளங்குவது, எனவே அத்தகைய உள்ளத்தின் வழிமுறைகளை ஆராய்கின்ற உளவியல், இலக்கியம் பற்றிய ஆராய்ச்சிக்கும் ஏற்புடையதாக இருக்க முடியும் — என்பது உளவியல் பகுப்பாய்வாளர் யுங் கூற்று”“ (நடராசன் ,2003)**

**மனதின் இருவகை அமைப்பு**

மனித மனத்தை அறிமனம் (Conscious mind)> அடிமனம் (Unconscious mind) என்னும் இரு பகுதிகளாகப் ஃபிராய்டு பகுத்து விவரித்துள்ளார்.

**அறிமனம்** (Conscious mind)

நினைவுக்குத் தெரிவது, உணர்வு ரீதியானது, தருக்க ரீதியானது, வெளிப்படையாகக் காணப்படும். ஆனால் தன்னிச்சையானது அல்ல, உள்ளேயிருக்கும் அடிமனதிற்கு கட்டுப்பட்டது.

*அடிமனம் (Unconscious mind)*

- வெளிப்படையாக உணராத நிலையில் உள்ளிருந்து அறிமனத்தை ***(Conscious mind)*** இயக்குகின்ற திறன் வாய்ந்ததாகும்.
- மொத்தமான உள்ளத்தின் செயலுக்கும் ஆற்றலுக்கும் இவ்மனம் காரணமாக இருக்கிறது.
- அடிமனம் இன்பவேட்கையின் ***(Pleasure principle)*** வடிவமாக உள்ளது.
- இன்ப வேட்கை சார்ந்த விருப்பம் நிறைவேற்றல் ***(Wishful filement)*** பொருட்டாகவும், அதன் விளைவாகவும், எண்ணிறந்த மன உளைச்சல்களுக்கு தளமாக இருப்பது.
- நிறைவேறாத ஆசைகளின் பல்வேறு வடிவங்கள், வக்கிரங்கள், விகாரங்கள் முதலியவற்றின் வடிகால் இந்த அடிமனம்.
- வேண்டாதன, தகாதன என்று சமுதாயம் கூறுவனவற்றையெல்லாம் மறைத்துக் கொள்ளப் பயன்படும் கொள்கலம்தான் அடிமனம் என்பது **ஃபிராய்டு ஆய்வின் முடிவாகும்.**

**"இவ்விரு மன இயல்புகளால் விளையும் நன்மை, தீமைகளைச் சமுதாயக் கண்ணோட்டத்திலும், தனிமனித உளவியல் கண்ணோட்டத்திலும் பகுத்து ஆராய்ந்த ஃபிராய்டின் உளவியல் ஆய்வு முறைதான் உளப்பகுப்பாய்வியல் *(Psychoanalysis)*" என்று அழைக்கப்படுகிறது (மணவாளன், 2002)**

உளவியல் பகுப்பாய்வு மூலம், சமுதாய உளவியல் பின்னணியில் படைப்பாளியின் வரலாற்றையும் எழுத்துக்களையும் பொருத்தி வைத்துப் பார்க்கலாம் என்பது, அமெரிக்க சமூக உளவியல் திறனாய்வாளர் **எட்மண்ட் வில்சன்** கூற்றாகும். இவ்வாறு ; உளவியல் கோட்பாட்டுதிறனாய்வு, இலக்கியத்தை மதிப்பிடுவதிலும் அதன் திறனை இன்னது என்று அறுதியிட்டு கூர்வதிலும் படைப்பாளியின் உண்மையான பங்களிப்பை வெளிக் கொணர்வதிலும் கவனம் செலுத்துகிறது.

**இவ்வாய்வுக் கட்டுரையில்**

குறுந்தொகையில் இடம் **வெள்ளிவீதியார்** பாடிய பாடல் **(கு.27),** மற்றும் **ஔவையார் பாடிய பாடல் (கு.28),** ஆகிய இரு பாடல்கள் மட்டும் மேல் விவரித்த உளவியல் கோட்பாட்டாய்வு வழி ஆராயப் பெறுகிறது.

**வெள்ளிவீதியார் பாடிய பாடல்**

**"கன்றும் உண்ணாது கலத்தினும் படாது**
**நல்ஆன் தீம்பால் நிலத்து உக்கா அங்கு**
**எனக்கும் ஆகாது> என்னைக்கும் உதவாது**
**பசலை உணீ இவர் வேண்டும்**

**திதலை அல்குல் என் மாமைக் கவினே" (நாகராசன், 2007)**

இப்பாடலைச் சங்க காலப் பெண்பால் புலவராகிய வெள்ளி வீதியார் பாடியுள்ளார். தலைமகனின் பிரிவை, தலைவி பொறுத்திருக்கமாட்டாள் எனக் கலங்கிய தோழிக்குத் தலைவி தன்னுடைய நிலைப்பாட்டை எடுத்துரைப்பதாக இப்பாடல் அமைகிறது. இளமையிற் சிறந்த வளமையில்லை என்பது நமது முன்னோர் வாக்கு அந்த வகையில், இப்பாடலில் வெள்ளி வீதியார், இளமையின் சிறப்பையும் அதன் பயனையும் அழகான உவமை வாயிலாக விவரித்திருப்பதைக் காணமுடிகிறது.

தலைவன் பொருள்தேடியோ, போருக்கோ சென்ற சூழலில் தலைவனின் பிரிவுத்துயர் தலைவியை மிகுந்த மன வேதனைக்கு உள்ளாக்குகிறது. இவ்வேதனையை பசுவின் வாழ்வியலோடு உவமைபடுத்தி விவரித்துள்ளார் வெள்ளிவீதியார். அதாவது நல்ல பசுவின் இனிமையான பாலானது, அப்பசுவின் கன்றினால் உண்ணப்பட வேண்டும் அல்லது பாத்திரத்தில் (கலத்தில்) கறந்து பிறருக்கு பயன்பட வேண்டும். இவை இரண்டும் இல்லாமல் தரையில் வீணாக வழிந்தோடினால் எப்பயனும் யாருக்கும் அளிக்காது அதுபோல, தலைவியின் அழகு நலன், தலைவிக்கும் பயன்படாமலும் தலைவனுக்கும் இன்பத்தை அளிக்காமலும் பசலை நோயால் உண்ணப்பட்டுப் பயனற்றுப் போகிறது என்பதைப் பாடலாசிரியர் உவமைப்படுத்தியுள்ளார்.

இப்பாடலில், தலைவியின் உரையாடல், அவ்வுரையாடலின் கருத்துப்புலப்பாடு, கருத்துப்புலப்பாட்டிற்கு தலைவி கையாளும் உவமை ஆகியன **தலைவியின் அடிமன அழுத்தங்களின் அல்லது ஒடுக்கங்களின் வெளிப்பாடாக இருப்பதைக் காணமுடிகிறது.** மேலும் தலைவி, தலைவனிடம் இன்ப நாட்டம் கொண்டவளாக இருப்பதைப் பாடல் வழி அறியமுடிகிறது. **"பாலியல் அழுத்தங்களுக்கு அடிமனம் (*Unconscious mind*) கொள்கலனாவதும் வாய்ப்பு நேர்ந்த விடத்து அறிமனத்தின் (*Conscious mind*) உதவியால் கலைநயம் சார்ந்த குறியீடுகளாக வெளிப்படுவதும் உண்மையே" (மணவாளன்> 2002).** இவ்உளவியல் கோட்பாட்டுச் சிந்தனை, தலைவியின் அடிமன வெளிப்பாடாக அமைவதை அறியமுடிகிறது. அவ்அடிமன வெளிப்பாடு இப்பாடலில் அழகான உவமையாக வெளிப்பட்டுள்ளது.

உளவியல் ஆராய்ச்சியினால் கலைஞனின் மனஉணர்வுகளையும் கலைஞன் படைப்பில் உள்அமிழ்ந்த பொருள்களையும் விளக்க முடியும் என்பது ஃபிராய்டின் கூற்று. இச்சிந்தனையை அடியொட்டி மேற்கண்ட பாடலை உளவியல் நோக்கில் ஆராயும் போது, தலைவனின் வருகையைத் தலைவி எதிர்பார்த்தும் தலைவியின் இளமை, அழகுநலன் ஆகியவை தலைவனுக்கு உரித்தாக வேண்டும் என்ற மன உணர்வு கொண்டவராகத் தலைவி இருப்பதை அறியமுடிகிறது.

**ஔவையார் பாடல்**

**"முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?**
**ஓரேன் யானும், ஓர் பெற்றி மேலிட்டு**
**"ஆ அ! ஒல் எனக் கூவுவேன் கொல்?**
**அலமரல் அசைவளி அலைப்ப என்**
**உயவு நோய் அறியாது, துஞ்சும் ஊர்க்கே" (நாகராசன், 2007)**

இப்பாடல் (கு.28) பாலைத் திணையில், தலைவி கூற்றாக அமைகிறது. இப்பாடலில், தலைவன் பொருள் ஈட்டி வருவதற்காகத் தலைவியைவிட்டுப் பிரிகிறான். தலைவன் வந்து விடுவேன் என்று கூறிச்சென்ற காலம் கடந்தும் அவன் வரவில்லை. அச்சூழலை நினைத்து தோழி கவலைப்படுகிறாள். அதற்குத் தலைவி பதில் கூறுவதாக இப்பாடல் அமைகிறது.

தோழி நான், தலைவன் பிரிவை நினைத்து, எனது உடல் மெலிந்து, பசலை நோயால் பீடிக்கப்பட்டுள்ளேன். இதை உணராத, அசைந்து வருகின்ற தென்றல் காற்றானது எனது காமநோயினை இன்னும் அதிகரிக்கிறது. அதோடு மட்டுமல்ல இவ்வூர் (மக்கள்), எனது நிலைமையை உணராமல் இனிமையாக, கண்ணயர்ந்து உறங்கி கொண்டிருக்கிறது.

**“அலமரல் அசைவளி அலைப்ப என்**
**உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே” (நாகராசன், 2007)**

இப்படி உறங்கும், இவ்வூர்க்கு எனது நிலைமையை எவ்வாறு அறிவிப்பேன்! எங்கயாவது முட்டிக்கொள்வேனா! மோதிக் கொள்வேனா! ஆவென்றும், ஒல்லென்னும் உரத்துக் கத்துவேனா! நான் என்ன செய்வேன் என்று தலைவி தனது இயலாமையைத் தோழியிடம் வெளிப்படுத்துகிறாள்.இப்பாடலை **உளவியல் கோட்பாட்டு ரீதியாகப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தும்போது, தலைவியின் அடிமனதின் வெளிப்பாடாக** இப்பாடல் அமைவதைக் காணமுடிகிறது.

**“நடைமுறையில் சந்திக்கின்ற அல்லது விரும்புகின்ற ஆசைகள் அல்லது கற்பனைகள், இயலாமை காரணமாகவே, சமூக உறவுகளின் மறைமுகமான அல்லது மரபார்ந்த தடைகள் *(Social taboos)* காரணமாகவே! அடிமனதில் படிந்து பின்பு அவை வினோதப்படுத்தலாகவும், கனவுகளாகவும் வெளிப்படும். வினோதப்படுத்தல் *(Fantasy)* என்பது ஒரு செய்தியை — செயலைச் சாதாரணமாக, இயல்பாகப் பார்க்காமல், ஓர் அற்புதமான, மாயமான ஆற்றலாகவும் பொருளாகவும் ஒரு கனவுத் தோற்றத்தின் தன்மையோடு பார்த்தல் வினோபடுத்தலாகும். இத்தகைய வினோதப்படுத்தலின் பின்னணியில் இருப்பவை பாலியல் உணர்வுகளை முதன்மையாகக் கொண்ட நிறைவேற்றப்படாத ஆசைகளே என்று ஃபிராய்டு குறிப்பிடுகிறார்” (நாகராசன், 2003)** இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, மேற்காணும் பாடலை (ஔவையார் பாடல்), அணுகும்போது **வினோதப்படுதல் *(Fantasy)*** நடைபெற்றுயிருப்பதை அறிய முடிகிறது.

ஒரு மனிதனின் தனிப்பட்ட ஒழுக்கம் மற்றும் சமூக ஒழுக்கம் ஆகியவற்றின் காரணமாக அவ்மனிதனின் மன உணர்வுகள் சுதந்திரமாக வெளிப்படாமல் அழுத்தப்படுகின்றபோது, அவ்வுணர்களும், அடிமனதில் ஆழமாய் மையங்கொண்டிருக்கும் பாலியல் உணர்வுகளும் அடிமனதின் ஊடாக அவனே அறியாத நிலையில் அவனுடைய சொல்லிலும் செயலிலும் வெளிப்படும். அவன் கலைஞனாக இருக்கும் போது, இத்தகைய உணர்வுகள் அவனுடைய அறிவார்ந்த விருப்பங்களையும் உணர்வுகளையும் மீறி அவனுடைய கலைப்படைப்பில் வெளிப்பட்டு விடுகின்றன என்பது உளவியலாளர்களின் கருத்தாக அமைகிறது. இக்கருத்தானது மேற்காணும் பாடலின் கருத்துபுலப்பாட்டுடன் பொருந்திவருவதைக் காணமுடிகிறது.

தீவிர மனவுணர்களால் அழுத்தபெற்றவன், தனது உணர்வுகளைச் சமூகம் மதிக்கவில்லை என்ற முடிவுக்கு வந்த நிலையில் அவன் அழுத்தப் பெற்ற மனவுணர்களுக்கு வடிவம் தரும்போது அவன் ஒரு பெருங்கலைஞனாக மாறுகிறான் என்பது ஃபிராய்டின் கூற்றாகும். ஆய்வுக்கு உட்படுத்திய இரண்டு பாடல்களின் பாடுபொருளிலும் தலைவியின் தீவிர, அழுத்தப்பெற்ற,

மனஉணர்வுகள் தலைவனால் (அல்லது) சமூகத்தால் மதிக்கப்படாத சூழலில் அவை சிறந்த கலைப்படைப்பாக உருபெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

சங்க இலக்கியப் பாடலான குறுந்தொகையில் தலைவியானவள் தலைவனின் பிரிவுத்துயரை இந்த அளவுக்கு வெளிப்பாடாகவும் ஆவேசத்துடனும் வெளிப்படுத்துவது மிகக்குறைவே. இதற்குக் காரணம் பல இருப்பினும் பாத்திரங்களின் மொழிக்கும் அவற்றின் நனவிலி மனத்திற்கும் உள்ள தொடர்பை விவரிக்கிறது பெண்ணிய உளப்பகுப்பாய்வு. அக்காலச் சமூக கட்டமைப்பும் ஒரு காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. சங்க காலத்தில் தலைவன் பொருள்தேட கடல்கடந்து செல்லும் போது தலைவியை அழைத்துச் செல்வது மரபு அல்ல.

**“முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை” (இளம்பூரணர், 2014)**

எனவே பொருள்தேடச் சென்ற தலைவன் திரும்பிவரும் வரை தலைவியானவள் மிகுந்த மனவேதனைக்கு உள்ளாக்கப்படுகிறாள். அவ்வேதனைகளின் வெளிப்பாடுகள் பாடலாக வடிவம் பெறுகின்றன. **“மனிதனுடைய பொருளாதாரச் சூழல்தான் அவனுக்குச் சிந்தனையையும் பண்பையும் உருவாக்குகிறது. சமூக அமைப்பே பொருளாதாரத்தின் அடிப்படையில்தான் அமைந்திருக்கிறது என்பது மார்க்ஸ் கருத்து” (சுப்பையா, 2007).** ஆய்வுக்கு உட்படுத்திய இரு பாடல்களிலும் தலைவனின் செயல்பாடு பொருளை மையமிட்டே அமைந்துள்ளது. இவை மேலேக்கண்ட மார்க்ஸ் கருத்துடன் ஒப்பு நோக்கத்தக்கதாக அமைந்துள்ளது.

மேலும் “பெண்களின் கனவுகள், பேச்சு முறைகள், பேச்சில் காணப்படும் ஒளிவு மறைவுகள், உள்ளுறைகள், திரிபுகள், வாய்தவறி வந்து விழும் சொற்கள் போன்றவற்றை வெளிக்கொண்டுவர பெண்ணிய உளப்பகுப்பாய்வு பயன்படுத்தப்படுகிறது. இதன்மூலம் பாத்திர ஆளுமைக்குள் மறைக்கப்பட்ட பகுதிகள் துலக்கமடைகிறது” **(காஞ்சனா> 2013)** இவ்உளவியல் சிந்தனையுடன், ஆய்விற்கு உட்படுத்திய வெள்ளிவீதியார் ஔவையார் பாடலுடன் ஒப்பு நோக்கிப் பார்க்கும்போது, பாத்திரங்களின் (தலைவி) மொழி வெளிப்பாட்டிற்கும், அவளின் மனத்திற்கும் இடையேயுள்ள தொடர்பை அறிந்து கொள்ளமுடிகிறது. வெள்ளி வீதியார் பாடலின் தலைவி தனது மனஉணர்வுகளை மிகத் தெளிவாக, அழகிய உவமை வாயிலாக வெளிப்படுத்துகிறாள். ஆனால் ஔவையார் பாடலின் தலைவி எதைப்பற்றியும் கவலைப்படாமல் கடும் கோபத்துடன், கொந்தலிக்கும் மனதுடன், வெளிப்படையான என்னோட்டங்களை மடைதிறந்த வெள்ளம் போல் வெளிப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது.

## முடிவுரை

இக்கட்டுரையில், ஃபிராய்டின் உளவியல் கோட்பாடுகளை அடியொற்றி ஆய்வுக்கு உட்படுத்திய வெள்ளி வீதியார் (குறு.27), ஔவையார் (குறு.28) ஆகிய இரு பாடல்களின் பாடுபொருளானது பாத்திரங்களின் (தலைவியின்) அடிமன அழுத்தங்களின் வெளிப்பாடாக அமைந்துள்ளது. இரண்டு பாடல்களிலும் ஒரே திணை, துறை, கூற்று, பாடுபொருள் ஒன்றாக அமைந்திருப்பினும் பாடலின் பாடு பொருளை வெளிப்படுத்தும் பாங்கில் வேறுபாடு காணப்படுகிறது. வெள்ளிவீதியாரின் பாடலில், பாடு பொருளானது அழகிய உவமை வாயிலாக, தலைவின் மென்மையான உணர்வுகளானது மிக நேர்த்தியாக வெளிப்பட்டியிருப்பதைக் காணமுடிகிறது.ஔவையார் பாடலில் பாடுபொருளானது, அறச்சீற்றத்துடனும் ஆவேசமாகவும் கொந்தலிப்பாகவும் வெளிப்பட்டுயிருப்பதைக் காணமுடிகிறது. அதற்கான சூழலும் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பெற்றுள்ளது. வினையே ஆடவர்களுக்கு உயிர் என நினைத்து தலைவன் பொருள் தேட சென்றிப்பினும் தலைவியின் இளமை அழிவையும் அதனால் தலைவிக்கு ஏற்படும் மனவேதனைய தலைவன், ஊர் மக்களும் உணரவில்லை என்பது தலைவியின் உள்மன

வெளிப்பாடாக அமைவதைக் காணமுடிகிறது. மேலும் சங்க காலத்தில் ஆண்களின் ஈடுபாடுகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் முக்கியத்துவம் தந்த அளவுக்கு பெண்களுக்குத் தரப்படவில்லை. அதன் தாக்கத்தைத் தலைவியின் அடிமன வெளிப்பாடாக பாடலில் காணமுடிகிறது. இவ்வுளவியல் பகுப்பாய்வானது, மேற்காணும் இரு பாடல்களைப் புதிய கோணத்தில் புரிந்து கொள்ள பெரிதும் வழிவகுத்துள்ளது. இவை போன்று மற்ற சங்க இலக்கியப் பாடல்களை உளவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் போது, அப்பாடல்கள் பற்றியப் புரிதலில் புதிய வெளிச்சம் ஏற்பட வாய்ப்புள்ளது.

**துணை நின்ற நூல்கள்**


1. இளம்பூரணனார் (உரையாசிரியர்)., தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை — 600 014, ஆறாம்பதிப்பு — 2014.
2. காஞ்சனா, இரா., பெண்ணிய உளப்பகுப்பாய்வும், பெண் மொழியும், செல்லப்பா பதிப்பகம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை — 625001. முதல்பதிப்பு — 2013.
3. சுப்பையா, அரங்க., இலக்கியத் திறனாய்வு இசங்கள் — கொள்கைகள், பாவை பப்ளிகேசன்ஸ், இராயப்பேட்டை, சென்னை — 600 014. முதல்பதிப்பு — 2007.
4. நாகராசன்(உரையாசிரியர்) , வி., குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41, சிட்கோ, இன்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை — 600 098,முதல்பதிப்பு — 2007.
5. மணவாளன், அ.அ., இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை — 600 113. முதல்பதிப்பு- 1995.


***References***


1. *Ilampoorananar (Urraiaasiriyar)., Tholkappiyam Porrulathigaram, Saratha Pathipagam, Chennai — 600 014, 6th Edition — 2014.*
2. *Kanchana, Ira., Peniya Ulapagupaiyum, Pen Mozhiyum, , Chellappa Pathipagam, Meenakshi Puthaga Nilaiyam, Madurai — 625001. First Edition — 2013.*
3. *Subbaiah, Arangam., Elakiya Tiranaivu Isangal, Pavai Pathipagam, Royapettah, Chennai — 600 014. First Edition — 2007.*
4. *Nagarasan(Urraiaasiriyar), V., Kurunthokai, New Century Book House (P) Lit.,41,CITCO, Industrial Estate,Ambattur,Chennai — 600 098, First Edition — 2007.*
5. *Manavalan, A.A., Irupatham Nurrandin Elakiya Kottpadugal, Ulaga Tamizhaichi Nirvanam, Chennai — 600 113. First Edition- 1995.*

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2025, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com